[5th February 1966

சர்க்கரை ஆலை

* 113 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

(அ) அலங்கா நல்லூர் (மதுரை மாவட்டம்) தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் என்றால் விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். முருகையன் : சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ? சர்க்கரை ஆலைக்கு லைசென்ஸ் போதுமான கரும்பு உற்பத்தியாகக் கூடிய இடத்தில் கொடுப்பதில்லை. கள்ளக்குறிச்சியில் ஒரு சர்க்கரை ஆலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு கரும்பு உற்பத்தி அதிகமாகக் கிடையாது. பங்குப் பணம் கொடுப்பதும் அங்கு அதிகம் கிடையாது. திருவண்ணாமலையில் இருந்து தான் அதிகமாக வசூலித்திருக்கிறார்கள். ஆகவே இனிமேல் லைசென்ஸ் கொடுக்கும் போது எந்த எந்த அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று கொள்கை நிர்ணயம் செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காருக்கு கொள்கை இருக்கிறது. ஆனால் கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் மற்ற சிலர் வந்து கள்ளக்குறிச்சி சிறந்த இடம், அங்குள்ள மக்களிடம் இருந்து பணம் வசூலித்துக் கொடுக்க முடியும் என்றும், கரும்பை உடனே உற்பத்தி செய்யமுடியும் என்றும் சொல்கிறார்கள். எங்களிடம் தூரதிருஷ்டிக் கண்ணாடி கிடையாது. இருப்பதை வைத்துப் பார்த்துச் செய்வதுதான்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : How many sugar factories are proposed to be opened in the next Five-Year Plan? May I know whether it is a fact that a two man Committee has been constituted to investigate the possibility of starting sugar factories and whether that Committee has submitted its report?

THE HON. SRI R. VENKATARAMAN : The State Government investigated the possibility of starting sugar factories in the State. They have come to the conclusion that about six or seven factories could be established. The Government sent an Investigation Team and they seem to have come to the conclusion that there is not much scope for a large number of sugar factories in Madras. That is being discussed.

Fire Service Station at Arni

* 114 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR :. Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to provide a Fire Service Station at Arni in North Arcot district during 1966?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

5th February 1966]

திரு. எஸ். முருகையன் : ஆரணி ஒரு நகரத்தின் மையமான இடமாக இருந்தும் அங்கு தீ விபத்து ஏற்பட்டால் வேலூர், அல்லது திருவண்ணுமலையில் இருந்து தீ அணைப்பு என்ஜின் செல்ல வேண்டியிருக்கிறது. இது மையமான இடமாக இருப்பதால் மீண்டும் இதைப் பரிசிலனை செய்து அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் ஏற்கனவே இதையெல்லாம் பரிசிலனை செய்திருக்கிறது. எந்தெந்த இடங்களில் முதலில் வைக்க வேண்டுமென்று ஒரு லிஸ்ட் தயாரித்து அதன்படி கொடுக்கப்படுகிறது. 15 நகரங்களுக்குக் கொடுத்த பிற்பாடுதான் ஆரணி 16 ஆக வருகிறது.

திரு. எஸ். முருகையன் : அண்மையில் அங்கு ஒரு தீ விபத்து ஏற்பட்டு பலவிடங்களில் சொத்துக்கள் சேதமாகியிருக்கின்றன. இதை உத்தேசித்தாவது அங்கு ஒரு தியணைப்பு நிலையத்தை உடனே வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பலவிடங்களில் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் எதற்கு முதலாவதாகக் கொடுப்பது என்று 1962-ல் பரிசிலனை செய்திருக்கிறுர்கள். மீண்டும் மீண்டும் பரிசீலனை செய்திருக்கிறுர்கள். ஆரணி நகரத்திற்குக் கொடுக்க வேண்டும், கொடுக்கக் கூடாது என்று இல்லை. ஏற்கனவே பரிசிலனை செய் திருக்கிறுர்கள். எப்போது கொடுக்கவேண்டுமோ அப்போது கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஏற்கனவே ஒரு லிஸ்ட் தயாரித்து வைத்திருக்கிறுர்கள் என்று சொன்னுர்கள். அந்த 15 இடங்களின் பெயர்களையும் கனம் அமைச்சர் படிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : The names of places are as follows : Tirunelveli, Perambalur, Coimbatore, Tindivanam, Srirangam, Ramanathapuram, Dharmapuri, Ambur, Gopichettipalayam, Kallakurichi, Shencottah, Krishnagiri, Mettupalayam, Tiruvellore, Uthamapalayam, Arni, Rasipuram, Vaniambadi, Srivilliputhur, Aruppukottai, Devakottai, Kuzhithurai, Walajapet, Colachel, Padmanabhapuram, Kodaikanal, Melapalayam, Cumbum, Tiruvottiyur and Arcot.

திரு. சா. கணேசன் : திருநெல்வேலி போன்ற நகரத்தில் இதுவரை தி அணைப்பு நிலையம் இல்லை என்றுதான் அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலிலிருந்து தெரியவருகிறது. அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் திருநெல்வேலியில் இனிமேல்தான் வைக்கவேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது பாளையங்கோட்டையில் இருக்கிறது. திருநெல்வேலியில் தனியாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள் அங்குள்ள மக்கள். அதனுல் தான் தனியாக திருநெல்வேலியிலும் ஏற்படுத்தவேண்டும் என்று இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

[5th February 1966

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் படித்த நகரங்கள் எல்லாம் பெரிய நகரங்கள். ஏராளமான ஜனத்தொகை உள்ள நகரங்கள். தொழிற்துறையிலும் முன்னேறிக்கொண்டு வருகிற நகரங்கள். ஆகவே இந்த இடங்களில் தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்துவது மிக இன்றியமையாத ஒன்று என்பதை அரசாங்கம் உணர்ந்து, அவற்றைக் கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா நகரங்களிலும் உடனடியாக ஏற்படுத்திவிட முடியாது. நம்முடைய நிதிநிலைமையைப் பார்க்க வேண்டும். இருந்தாலும் மாநில ஐ. ஜி. அவர்கள் எதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்களோ அதற்குத் தகுந்தவாறு அமைக்கப்படும். அந்த முறையில் இப்போது திருநெல்வேலி, பெரம்பலூர், திண்டிவனம், கோயம்புத்தூர் இந்த நான்கு இடங்களிலும் வெகு சீக்கிரமாக ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் திண்டிவனத்திலும், கோயம்புத்தூரிலும் அடுத்த ஆண்டில் நிறுவுவதற்காக பார்ட்-2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : அமைச்சர் அவர்கள் படித்த 15 நகரங்களில் ஒன்று கூட தஞ்சை ஜில்லாவில் இல்லை. பட்டுக்கோட்டையில் தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். அது முனிசிபாலிட்டியாக வந்த பின்னால் முதலிடம் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் முன்னால் சொல்லியிருக்கிறார்கள். இப்போது முனிசிபாலிட்டியாகி 10 மாதங்கள் ஆகிவிட்டன. ஆகவே இங்கு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த சர்க்கார் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது முனிசிபாலிடியாகி பத்து மாதங்கள் ஆகின்றன. ஏற்கனவே முனிசிபாலிட்டியாகியிருக்கின்ற பல இடங்களில் இன்னும் வைக்கவேண்டியிருக்கிறது.

திரு. சா. கணேசன் : இந்த மாதிரி தீ அணைப்பு நிலையம் வைப்பதில், ஃபயர் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளோடு தொடர்பு கொண்டு அவர்களே தீ அணைப்பு வண்டிகள் வைத்து நிவாரண வேலைகள் செய்து தரக்கூடிய முறையில் இது போன்று வெளிநாடுகளில் எல்லாம் ஃபயர் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் தலையிட்டு பணியாற்றி வருகின்றன. அதைப்போன்ற வசதிகளை இங்கும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர்களே, இம்மாதிரி தீ அணைப்பு நிலையம் வைப்பதற்கு முனிசிபாலிட்டிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பல பெரிய நகரங்களிலும் இதுவரை அமைக்கப்படவில்லை. பட்டுக்கோட்டையில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் மன்னார்குடி, தஞ்சாவூர் போன்ற இடங்களிலிருந்து வண்டிகள் வரவேண்டியிருக்

5th February 1966]

கிறது. அறந்தாங்கியிலிருந்து வர வேண்டுமென்றாலும் 60 மைல் தூரமிருக்கிறது. ஆகவே மறுபரிசீலனை செய்து பட்டுக் கோட்டையில் உடனடியாக ஒரு தீ அணைப்பு நிலையம் வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மறுபரிசீலனை ஒன்றும் தேவையில்லை. அரசாங்கத்தினுடைய நிதிநிலைக்கு ஏற்ப, அரசாங்கம் பரிசிலனை செய்து ஏற்படுத்துவதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : அமைச்சர் அவர்கள் படித்த ஊர் களில் எல்லாம் அடுத்த ஆண்டுக்குள் தீ அணைப்பு நிலையம் ஏற்படுத் தப்பட்டு விடுமா ? அல்லது இதற்கும் ஐந்து ஆண்டு அல்லது பத்து ஆண்டு என்று திட்டம் போட்டு நடத்தப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரே ஆண்டுக்குள் எல்லா இடங் களிலும் ஏற்படுத்தி விட முடியாது. திட்டமிட்டு, நமது நிதி நிலைக்கு ஏற்பத்தான் அமைக்கப்படும். ஒவ்வொரு ஆண்டிலும் போலீஸ் ஐ.ஜி. அவர்கள் இன்னின்ன இடத்திற்கு பிரையாரிட்டி கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. வி. சீராமுலு : இப்போது படிக்கப்பட்ட 15 ஊர்களில் முக்கியமாக தர்மபுரி மாவட்டத்தில் ஒரு இடத்தையும் காண வில்லை. ஆகவே, அங்கு ஏதாவது ஒரு இடத்திற்கு டாப் பிரையா ரிட்டி கொடுத்து தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்தப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தர்மபுரி மாவட்டம் இப்போது தான் வந்திருக்கிறது, கனம் அங்கத்தினர் போன்றவர்களுடைய எதிர்ப்பு களுக்கிடையில். கொஞ்ச நாட்கள் கழித்து இங்கு ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கலாம்.

திருமதி அ. கிருஷ்ணவேணி : அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதுபோது, பெரியகுளம், உத்தமபாளையம், கம்பம் போன்ற இடங்களில் தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்தப்போவதாக சொன் னார்கள். தேனி பெரிய நகரமாக இருக்கிறது. இப்போது முனிசி பாலிட்டியாகவும் ஆகியிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : உத்தமபாளையம், கம்பம் முதலிய இடங்களில் ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தி ருக்கிறது. ஆரணியிலும் வைக்க் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. உத்தமபாளையம், கம்பம் முதலிய இடங்களுக்கு முன்பே ஆரணி வந்துவிடுகிறது. தேனி இந்த லிஸ்டில் இடம் பெறவில்லை.

பிச்சைக்காரர் முகாம், ஆவடி

• **115 கேள்வி:—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965-ம் வருடம், மார்ச்சு, செப்டம்பர் மாதங்களில் ஆவடியில் இருக்கும் பிச்சைக்காரர் முகாமில் முறையே எத்தனை பேர்கள் இருந்தார்கள் ?